இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 107 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 11 – செவ்வாய்க்கிழமை 26 நவம்பர் 2024 – வெளியூர் 28 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 107: Thiruvalluvar Year - 2055 - Karthigai 11 - Tuesday 26 November 2024 - Dak 28 Pages ₹ 5.00

## மழையை எதிர்கொள்ள

# அரசின் அனைத்து ஏற்பாடுகளும் தயார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2024) மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ், சென்னை, சோழிங்கநல்லூர், கண்ணகி நகரில், மாற்றுத்திறனாளிகளுக்கு உடல் / மனம் சம்பந்தப்பட்ட மறுவாழ்வு சேவைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள விழுதுகள் – ஒருங்கிணைந்த சேவை மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, க.கணபதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திருமதி எம்.லக்ஷ்மி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.விஜயகார்த்திகேயன், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் இரா.சுதன் (ஓய்வு), மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, நவ. 26 -**

**“மழையை எதிர்கொள்ள அரசின் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2024) மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ், சென்னை, சோழிங்கநல்லூர், கண்ணகி நகரில், மாற்றுத் திறனாளிகளுக்கு உடல் / மனம் சம்பந்தப்பட்ட மறுவாழ்வு சேவைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள விழுதுகள் - ஒருங்கிணைந்த சேவை மையத்தை திறந்து வைத்தார்.

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக் காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காக தனித் துறையை உருவாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையுடன் அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு “மாற்றுத்திறனாளிகள்” என்ற சொல்லையும் அறிமுகப்படுத்தினார்.

இந்த ஒருங்கிணைந்த சேவை மையத்தில் முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளின் உடல் மற்றும் மனம் தொடர்பான நாள்பட்ட மறுவாழ்வு தேவைகளை நிறைவேற்றும் வகையில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புக் கல்வி, கண் பார்வை அளவியல், கேட்டல் மற்றும் பேச்சுப்பயிற்சி, இயன்முறை, செயல்முறை மற்றும் உளவியல் ஆகிய ஆறு மறுவாழ்வு சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுவதோடு, இச்சேவைகளை வழங்க வல்லுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மையம் முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.

2023-24 இல் கள அளவில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு பணியின் போது, கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, இம்மையத்தில் சேவைகள் வழங்கப்படும். இம்மையமானது பெருநகர சென்னை மாநகராட்சியின் பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில் அனைத்து அணுகல் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி!

பின்னர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது–

நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய பிரச்சினைகள் குறித்து தி.மு.கழக எம்.பி.க்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் கழக எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்புவார்கள்.

மேலும் மழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மழையை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவை டிசம்பர் 9ஆம் தேதி கூடுகிறது!

### சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு பேட்டி!

சென்னை, நவ. 26 –

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றப் பேரவைத் தலைவர் அலுவலகத்தில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், சட்டப்பேரவை கூட்டத் தொடர் வருகின்ற டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் 9ஆம் தேதி 9.30 மணிக்கு துவங்கவுள்ளது என்றார். மேலும் அலுவல் ஆய்வு கூட்டத்தில் எத்தனை நாட்கள் கூட்டம் நடைபெறும் என்பதை கூடி முடிவு செய்யும் எனவும் தெரிவித்தார்.

சட்டப்பேரவை நிகழ்ச்சி நேரலை மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணம் குறித்த கேள்விக்கு பதிலளித்த சபாநாயகர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வந்த. பின்பு தான் நேரலை செய்யும் முறை வந்துள்ளது.

முழுமையாக நேரலை செய்வது தொடர்பாக படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். மேலும் வெளிநாடுசுற்றுப்பயணத்தின் போது AI தொடர்பாக பேசும் வாய்ப்பு கிடைத்தது. தமிழகம் AI தொழில் நுட்பத்தில் முதன்மை மாநிலமாக உள்ளது. மாணவர்களுக்கு இது பயனளிக்கும் அதேபோல் சட்டப்பேரவையிலும் காகிதமில்லாத முறை உள்ளது என்றார். இந்த சந்திப்பின்போது சட்டப்பேரவைச் செயலாளர் சீனிவாசன் உடன் இருந்தார்.

## எனது பிறந்தநாளை மக்கள் பணிக்கும் கழகப் பணிக்கும் பயன்படுத்தி – கழகத் தலைவர் தலைமையில்

# ‘திராவிட மாடல்’ அரசு மீண்டும் அமைந்திட உறுதியேற்போம்!

## இதுவே என் பிறந்தநாள் வேண்டுகோள் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, நவ. 26 -**

**“எனது பிறந்த நாளை மக்கள் பணிக்கும் கழகப் பணிக்கும் பயன்படுத்தி கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ‘திராவிட மாடல்’ அரசு மீண்டும் அமைந்திட உறுதியேற்போம்” என்று கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வருகிற நவம்பர் 27ஆம் தேதி என் பிறந்தநாள் வருவதையொட்டி, தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திவருகிறார்கள். அதிலும் குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு `கழகத்துக்கு நூறு இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து தாருங்கள்’ என்று கழகத்தலைவர் அவர்கள் கழக இளைஞர் அணிக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றும்விதமாக, நடத்தப்பட்ட `என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் பேச்சாளர்கள் இந்த நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதை அறியும்போது, உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மேலும், ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த தலைமைக்கழகப் பேச்சாளர்களுடன் இணைந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம், இந்த இளம் பேச்சாளர்கள் மென்மேலும் பட்டை தீட்டப்படுகிறார்கள் என்பதில் என் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது.

என்னைப் பொறுத்தவரை பிறந்தநாள் என்பது மற்ற நாள்களைப் போலவே அதுவும் ஒரு நாள்தான். ஆனால், இளைஞர் அணிச் செயல்வீரர்கள் உள்ளிட்ட கழகத் தோழர்களும் என்னைத் தங்கள் வீட்டுப்பிள்ளையாகக் கொண்டாடி மகிழும் தமிழ்நாட்டு மக்களும் காட்டும் பேரன்பும் ஆதரவுமே என் பிறந்த நாளைச் சிறப்பான நாளாக மாற்றியிருக்கிறது.

### கொள்கைத் திருவிழா!

திருமண விழாக்களைத் தங்கள் கொள்கைகளைப் பரப்புரை செய்யும் வாய்ப்பாகக் கருதி, அதையே கொள்கைவிளக்க நிகழ்வாக மாற்றிக்காட்டியது, நமது திராவிட இயக்கம். அதே வகையில்தான் தங்கள் பிறந்தநாள் விழாக்களையும் இயக்கத்துக்கான கொள்கைத் திருவிழாவாக மாற்றிக் காட்டியவர்கள் நம் திராவிட இயக்க முன்னோடிகளான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர். நமது கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையும் கொள்கைத் திருவிழாவாகவே நம் கழகத்தோழர்கள் கொண்டாடி வருகிறார்கள்.



### கழக முன்னோடிகளை கௌரவிக்க வேண்டும்!

அந்தவகையில், என் பிறந்தநாளைக் கொண்டாட விரும்பும் கழகத்தோழர்களும் அதை ஆக்கப்பூர்வமான மக்கள் பணிக்கும் கழகப்பணிக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே, என் விருப்பம். முன்பே சொன்னதுபோல், திராவிட இயக்கத்தின் கொள்கைகளையும் நம் ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகளையும் மக்களிடம் எடுத்துச்செல்லும் நிகழ்வுகளை நடத்துவதில், கழகத்தோழர்கள் முனைப்புக் காட்டவேண்டும். அதேபோல் நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட, போற்றுதலுக்குரிய நம் கழக முன்னோடிகளை நேரில் கண்டு அவர்களை உரிய வகையில் கௌரவிக்க வேண்டும் என்று, நம் இளைஞர் அணித் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### பேனர்கள் - பட்டாசுகள் வெடிப்பதை தவிர்த்திடுவீர்!

`ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்ற பேரறிஞர் அண்ணாவின் வார்த்தைகளுக்கு ஏற்ப, ஏழை அடித்தட்டு மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கும் நிகழ்வுகளையும் கழகத்தோழர்கள் நடத்த வேண்டும். ஏற்கெனவே, நம் திராவிட மாடல் அரசால் பலன்பெறும் அடித்தட்டு மக்களுக்கு அத்தகைய உதவிகள் மேலும் பலம் சேர்க்கும் என்பதால், அத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவதில் கழகத்தோழர்கள் முனைப்புக் காட்ட வேண்டும் என்பதே என் விருப்பம். அதே போல் பெருமழை மற்றும் வெள்ளம் காரணமாக மக்கள் பாதிக்கப்படும் சூழல் வந்தால் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் இளைஞர் அணி செயல்வீரர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக ஒரு விஷயத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். என் பிறந்தநாளை முன்னிட்டு, ஃபிளெக்ஸ் பேனர்கள் வைப்பதையும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் பட்டாசுகள் வெடிப்பதையும் கழகத்தோழர்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று, உரிமையுடன் வேண்டுகோள் விடுக்கிறேன். அவற்றைத் தவிர்த்துவிட்டு, மேற்கண்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் கழகத்தினர் கவனம் செலுத்துவதே எனக்கு மகிழ்ச்சியளிக்கும்.

எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைக்கவே, விழி பிதுங்கிக்கொண்டிருக்கும்போது நாம் 2026சட்டமன்றத் தேர்தலுக்கான வேலைகளைத் தொடங்கிவிட்டோம். 2026இல் வெற்றிபெற்று கழகத்தலைவர் அவர்களின் தலைமையிலான `திராவிட மாடல்’ அரசு மீண்டும் அமைவதற்கான உறுதியை இந்தப் பிறந்தநாளில் என்னுடன் சேர்ந்து கழகத்தோழர்களும் ஏற்றுக்கொள்ளுங்கள். இதுவே என் பிறந்தநாள் வேண்டுகோள்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.